# திஹகொட பிரதேச சபை
# மாத்தறை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஆகஸ்ட் 03 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 செப்டம்பர் 15 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் அடங்கியுள்ள எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த திஹகொட பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்க முடியாதுள்ளேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நாட்குறிப்பு பதிவு 20 இன் கீழ் 2010 ஆம் ஆண்டில் வாடகை வருமானமாக அறவிடவேண்டிய ரூபா 690,444 தொகையான நிலுவை வாடகை வருமானம் கணக்கில் வரவு வைக்கப்பட்ட போதிலும் பேரேட்டின் பிரகாரம் ரூபா 782,683 ஆன வரவு வைக்கப்பட்டமையினால் வேறுபாடு ரூபா 92,239 ஆக இருந்தது.

(ஆ) நாட்குறிப்பு பதிவு 17 இன் கீழ் முன்னைய ஆண்டிற்குரியதாக கிடைத்திருந்த தேர்தல் முற்பணமான ரூபா 32,820 தொகை திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்படுவதற்குப் பதிலாக தொங்கல் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

(இ) நாட்குறிப்புப் பதிவு 10 இன் கீழ் முன்னைய ஆண்டில் IV ஆம் காலாண்டிற்காக செலுத்தப்பட்ட தவணைப் பணமான ரூபா 55,420 தொகையானது உள்நாட்டுக்கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியத்தில் செலவு வைப்பதற்குப் பதிலாக கடன்கொடுத்தோடுத்தோரில் வரவு

வைக்கப்பட்டு உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) நாட்குறிப்புப் பதிவு 14 இன் கீழ் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட மூலதனச் சொத்துக்களுக்கான மூலதன செலவினக் கணக்கு ரூபா 16,930 இனால் வரவு வைக்கப்பட்ட போதிலும் கடன்கொடுத்தோர் பேரேட்டுக் கணக்குகளில் அவ்வாறான பதிவொன்று காணப்படாமையினால் கடன்கொடுத்தோர் கணக்கு அப்பெறுமானத்தினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) நாட்குறிப்பு பதிவு 09 இன் கீழ் 2010 ஆம் ஆண்டிற்கான கடன்கொடுத்தோர் ஏற்பாடுகளைச் செய்யும்போது நானாவித கடன்கொடுத்தோர் (வழங்கல்கள்) கணக்கு ரூபா 402,316 இனால் செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் ரூபா 385,386 தொகையான செலவு வைக்கப்பட்டமையினால் வேறுபாடு ரூபா 16,930 ஆக இருந்தது.

(ஊ) நாட்குறிப்புப் பதிவு 16 இன் கீழ் முன்னைய வருடங்களில் வேலைகளுக்காகச் செலுத்த வேண்டிய ரூபா 99,630 தொகையான குறிப்பிடப்பட்ட வரியை வருமானத்திற்கு எடுக்கும் போது திரண்ட நிதியக் கணக்கில் செலவு வைப்பதற்குப் பதிலாக பிழையாக ஏனைய வருமானக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஆயுர்வேத மருந்து இருப்புக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 68,835 ஆக இருந்ததுடன் ஆயுர்வேத இருப்புப் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 84,675 ஆக இருந்தமையினால் வேறுபாடு ரூபா 15,840 ஆக இருந்தது.

(ஏ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளூராட்சி சேவைகள் ஓய்வூதிய நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 1,393,475 தொகை கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

07 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 46,376,410 ஆக இருந்ததுடன் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 37,001,249 ஆக இருந்தமையால் ரூபா 9,375,161 ஆன வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மாதாந்த பெறுவனவுப் பொழிப்பு (பி.ச.16) மற்றும் பேரேட்டுக் கணக்குகளுக்கிடையே ரூபா 5,821 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 தொங்கல் கணக்குகள்

பேரேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு தொங்கல் கணக்கின் செலவு மீதி ரூபா 775,092 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் செலவு மீதி ரூபா 2,331,789 ஆக இருந்தமையால் ரூபா 1,556,697 ஆன வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

### 1.3.5 செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 35,759,006 ஆகும்.

(ஆ) 2005 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை கொண்டுவரப்படுகின்ற ரூபா 8,984,628 தொகையான வேலைக் கடன்கொடுத்தோரைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

08 கணக்கு விடயங்கள் தொடர்பாக ரூபா 54,943,815 பெறுமதியான மீதிகளுக்கான மெய்மையாய்வுச் சபை அறிக்கைகள், உரிமை உளமை என்பவற்றை உறுதிப்படுத்தும் ஆவணங்கள், கடன்பட்டோர் பதிவேடுகள், காலப்பகுப்பாய்வு, மீதியினை உறுதிப்படுத்தும் கடிதங்கள் போன்றன காணப்படாமையால் அவ் விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்தவற்கு அல்லது ஏற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 இணக்கமின்மைகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|
| (அ) | | 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| | (i) | விதி 145 | ஒவ்வொரு வைப்பு வகைகளிலும் காணப்படும் நிதி தொடர்பாக விபரமான அறிக்கை ஒன்று ஒவ்வொரு வருட இறுதியிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | விதி 164 | சபையின் கணக்குகள், ஆவணங்கள் என்பன செயலாளர் அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் நாளாந்தம் பரிசோதனை செய்து அதற்காக சுருக்கக் கையெழுத்து இடுவதன் மூலம் உறுதிப்படுத்தியிருக்கவில்லை. |
| | (iii) | விதி 180 | காசு மற்றும் களஞ்சியங்களுக்குப் பொறுப்பாக செயற்படுகின்ற உத்தியோகத்தர்கள், வருமானம் சேகரிக்கும் உத்தியோகத்தர்கள் என்ற ஆறுபேர் பிணை சமர்ப்பித்திருக்கவில்லை. |
| | (iv) | விதி 193 | பாதீட்டு மற்றும் குறை நிரப்பு மதிப்பீட்டுடன் செலவு விடயங்களின் உள்ளவாறான மீதியுடன் ஒப்பிட்டு மிகைகள் மற்றும் பற்றாக் குறைகளுக்கான காரணங்களை காட்டும் கூற்றொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |
| | (v) | விதி 206 | பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) | நி.பி. 262(2) | கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களில் மற்றும் குறிப்பிட்ட விலைப் பட்டியல்களின் கொடுப்பனவு முத்திரை பதியப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நி.பி. 396(ஈ) | வழங்கப்பட்டிருந்தும் 06 மாதங்களை விஞ்சிய ரூபா 19,314 பெறுமதியான 13 காசோலைகள் தொடர்பாக பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய இலக்கம் ஐஏஐ/2002/02 கொண்ட திறைசேரிச் செயலாளரின் சுற்றுநிருபம் | 08 கணனிகளின் துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணியிருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.3 ஆம் பிரிவு | முறையான பிரகாரம் தயாரிக்கப்படாத கடன் விண்ணப்பப்படிவங்களுக்காக அறிவுறுத்தல்களுக்கு முரணாக 12 கடன்பெறுனர்களுக்கு மீளாய்வாண்டின்போது ரூபா 482,420 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

### 1.3.8 பதிவேடுகள் பேணுவதிலுள்ள குறைபாடுகள்

கீழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் நாளதுவரையாகவும் முறையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை.

(i) நிலையான சொத்துப் பதிவேடு
(ii) ஊழியர் கடன் பதிவேடு
(iii) வைப்புப் பதிவேடு
(iv) கடன்பட்டோர் பதிவேடு

(v) கடன்கொடுத்தோர் பதிவேடு

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், சபையின் 2010 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 3,585,636 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேர் மாறாக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 149,861 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் உட்பட நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் 2011 மார்ச் 03 திகதிய எனது கடிதத்தின் பிரகாரம் குறிப்பிட்ட படிவத்தில் சமர்ப்பிக்கும் படி தலைவரை வேண்டிக் கொண்ட போதும் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த பிழையற்றவை அல்ல என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலுவை வருமானக் கூற்றின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட நிலைமை முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு சுருக்கமாக கீழே தரப்பட்டுள்ளது.

| வருமான விடயங்கள் | நிலுவை வருமானம் திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | அதிகரிப்பு |
|---|---|---|---|
| | 2010 | 2009 | % |

| | ரூபா.000 | ரூபா.000 | |
|---|---|---|---|
| ஏக்கர் வரி | 19 | 17 | 11.7 |
| வியாபார அனுமதிப்பத்திரம் | 33 | 15 | 12.0 |
| வுாடகை | 236 | 143 | 65.0 |
| நீர் வாடகை | 265 | 213 | 24.4 |

### 2.2.2 நிலுவை வாடகை மற்றும் கட்டணம்

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 287,968 தொகையான நிலுவை வாடகை மற்றும் கட்டணம் என்பவற்றை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவுகள் 158 மற்றும் 159 இன் அறிவுறுத்தல்களின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.3 பொதுச் சந்தைக் கடை வாடகை

திஹகொட பொதுச் சந்தைக் கடை மற்றும் யட்டியன பொதுச் சந்தைக் கடைகள் என்பவற்றை வாடகைக்கு விடப்பட்டமை தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(i) திஹகொட பொதுச் சந்தையில் 13 கடைகளும், யட்டியன பொதுச் சந்தையில் 09 கடைகளும் ஒப்பந்த காலம் முடிவடைந்திருந்த போதிலும் வாடகை ஒப்பந்த இல. 01 இன் நிபந்தனைகளின் பிரகாரம் மீள அவ் ஒப்பந்தம் வலுவாக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) வாடகை ஒப்பந்தத்தின் 04 ஆம் இலக்க நிபந்தனையின் பிரகாரம் திஹகொட பொதுச் சந்தையில் 04 கடைகளிலிருந்தும் மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 76,983 தொகையான வாடகை நிலுவையாக இருந்ததுடன் ஒப்பந்த நிபந்தனையின் 09 ஆம் இலக்கத்தின் பிரகாரம் நிலுவை வாடகையினை அறவீடு செய்வதற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) சபைக்குச் சொந்தமான கடைகள் தொடர்பாக தென்மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய தபபா/பபாகொ/2010/01 ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்ட படிமுறை இலக்கங்கள் 05, 06, 07 மற்றும் 11 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.4 நீதி மன்றத் தண்டப் பணம்

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதிவான் நீதி மன்றம் ஒன்றினால் 2010 திசெம்பர் 31 திகதி வரை அறவிடப்பட்டு பிரதம செயலாளருக்கு அனுப்பியிருந்த ரூபா 257,584 இற்கான தண்டப் பணத்தினை சபைக்கு அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.5 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 4,124,382 முத்திரைக் கட்டணம் கிடைக்க வேண்டியிருந்தது.

### 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான சபையின் பாதீட்டு மற்றும் உள்ளவாறான செலவுகள் உரிய முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| செலவு விடயம் | பாதீடு | உள்ளவாறான | முரண் | பாதீடு | உள்ளவாறான | முரண் |
| **மீண்டுவரும் செலவுகள்** | ரூபா. 000’ | ரூபா. 000’ | ரூபா. 000’ | ரூபா. 000’ | ரூபா. 000’ | ரூபா. 000’ |
| ஆளுக்குரிய வேதனம் | 10,048 | 8,862 | 1,186 | 9,663 | 8,611 | 1,052 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஏனையவை | 5,235 | 3,022 | 2,213 | 5,240 | 4,574 | 666 |
| உப கூட்டுத் தொகை | 15,283 | 11,884 | 3,399 | 14,903 | 13,185 | 1,718 |
| மூலதன செலவுகள் | 68,590 | 66,170 | 2,420 | 85,100 | 37,839 | 47,261 |
| மொத்தக் கூட்டுத் தொகை | 83,873 | 78,054 | 5,819 | 100,003 | 51,024 | 48,979 |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி

(அ) 2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஊழியர் தரம் | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| நிறைவேற்றுனர் | 02 | 02 |
| இரண்டாம் தரம் | 05 | 12 |
| ஆரம்ப தரம் | 15 | 13 |
| ஏனையவை(அமைய,தற்காலிகம்) | - | 09 |
| மொத்தம் | 22 | 36 |

(ஆ) மீளாய்வாண்டில் பதவியணினரின் சம்பளத்திற்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 8,262,203 ஆக இருந்த போதிலும் உள்ளூராட்சி ஆணையாளரிடமிருந்து ரூபா 8,203,000 தொகை மாத்திரமே மீளளிக்கப்பட்டிருந்தமையினால் சபைக்கு ரூபா 59,203 தொகையான மேலதிகச் செலவுப் பொறுப்பொன்று ஏற்பட்டிருந்தது.

(இ) திறைசேரிச் செயலாளரின் 2002 சனவரி 03 ஆம் திகதி மற்றும் 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் 14 ஆம் மற்றும் 28 ஆம் இலக்கத்தினால் உள்ளூராட்சி நிறுவனங்களின் அமைய, நாளாந்த மற்றும்

ஒப்பந்த ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ளல் கைவிடப்பட்டிருந்த போதிலும் அவ் அறிவுறுத்தல்களுக்கு முரணாக 09 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டில் சம்பளமாக சபை நிதியத்திலிருந்து ரூபா 931,522 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 கிடைக்க வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 47,949,184 ஆகக் காணப்பட்டது.

### 2.5.2 அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன்

2010 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய பதவியணிக் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 655,420 ஆகக் காணப்பட்டதுடன் 01 வருட காலத்தை விஞ்சிய அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட கணக்கு மீதிகளில் கூட்டுத்தொகை 62,966 ஆகும்.

## 2.6 உள்ளகக் கணக்காய்வு

சபையில் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்